1994 மார்ச் 30]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 149—திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

149—

தமிழ்நாட்டில் வைரத் தொழிற்சாலை அமைத்தல்.

*15036—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வைரத் தொழிற்சாலை (செயற்கை வைரம்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயற்கை வைரத் தொழிற்சாலை அமைய வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்தச் செயற்கை நேர்த்தி வைரத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் முழுவதும் பெண்களாக இருக்கிறார்கள். படித்துவிட்டு ஆயிரக் கணக்கான பெண்கள் வேலையில்லாமல் இருக்கும் இந்த நேரத்தில், குடிசைத் தொழிலைப்போல செய்து கொண்டிருக்கின்ற இந்தச் செயற்கை வைரத் தொழிற்சாலையில் இப்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சி அளித்து வருகிறார்கள். அதைப்போல தனியாக தொழிற்சாலை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயற்கை வைரத்தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது மூலக் கேள்வி. தொழிற்சாலையைப்பற்றி கேட்டிருக்கிறார். அம் மாதிரியான ஒரு தொழிற்சாலையை நிறுவுகின்ற ஒரு வாய்ப்பு தற்சமயம் தமிழகத்திலே இல்லை. அந்தமாதிரி செயற்குறிப்பும்

அரசிடம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் சொல்வது, செயற்கை வைரத்தை பட்டை எடுத்து, அதைத் தீட்டுகின்ற, அதாவது பாலிஷ் செய்வதைப் பற்றி பேசுகிறார். அதற்கு ஏற்கெனவே நேற்று நான் பதில் சொல்லி இருக்கிறேன். அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்சிராப்பள்ளி தொகுதியிலே செயற்கை வைரங்கள் பட்டை தீட்டும் தொழில் மிகவும் பரவலாகச் செய்யப்படுகிறது. அதற்குக் காரணமாக இருக்கின்ற மூலப் பொருள்களான செயற்கை வைரத்தைத் தயாரிப்பதற்குத் தனியார் ஒருவர் மொனாப் பொலியாத அதனையெல்லாம் எடுத்து செய்து வருகிறார். ஆகவே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழ்நாடு அரசே இந்த மூலப் பொருள்களைத் தயாரிப்பதற்கு ஒரு வைரத் தொழிற்சாலையைத் உருவாக்குவதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைரம் மற்றும் செயற்கை வைரக் கற்கள் வளர்ச்சிக் கழகத்தின் கிளை நிறுவனமான, சின்தடிக் டைமண்ட்ஸ் லிமிடெட், பாம்பே, தாலோஜா என்ற இடத்திலுள்ள தொழிற்சாலையில் க்யூபிக் சிர்கோனியாவை உற்பத்தி செய்கின்றனர். கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள மேட்டுப்பாளையத்தில் இந்தோ - ஸ்விஸ் சின்தடிக் ஜெம் பேக்டரி என்ற லிமிடெட் கம்பெனி சின்தடிக் கோரண்டியை உற்பத்தி செய்கின்றது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை வைரக் கற்களின் மூலக் கற்களைவிட இறக்குமதி செய்யப்படும் மூலக் கற்கள் மிகவும் மலிவான நிலையில் உள்ளன. இறக்குமதி தீர்வை இல்லாத மற்றும் இறக்குமதி சலுகைத் திட்டம் ஆகிய சலுகைகள் காரணமாக இதன் விலை மலிவாக உள்ளது. இந்த மூலக் கற்கள், ஸ்விஸ், அமெரிக்கா, சிங்கப்பூர், பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற பல்வேறு அயல் நாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே, இத்தொழிலுக்கு மிகுதியான முதலீடும், அதிகமான மின்சாரமும் தேவைப்படுவதால் புதிதாக நிறுவனம் தொடங்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்சாலை அமைக்க இயலாது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதை ஒரு பெரிய தொழிற்சாலையாக அமைக்க, அதிக முதலீடும், தொழில் நுட்பமும் தேவைப் படுவதைத் கருத்தில் கொண்டு, இங்கேயே கிடைக்கும் மக்களுடைய தொழில் நுட்பத் திறனைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுசிறு தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை வைரத்தைப் பட்டை தீட்டு கின்ற பணிக்கு ஏற்கனவே நாம் மகளிர் திட்டங்களிலே இருந்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து நாம் பல்வேறு இடங்களிலே அதை ஊக்குவித்து வருகிறோம். அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களிலும் அந்தத் திட்டத்தை இன்று செயல்படுத்தி வருகிறார்கள். அதைப்பற்றி ஏற்கனவே நேற்று விரிவாக, தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். தொழிற்சாலை அமைப்பது என்பது இந்தத் தொழிலைப் பொறுத்தவரை, இதற்கு மிக அதிகமான மின்சாரம் தேவைப் படுகிறது. இந்த ஒரு இண்டஸ்ட்ரிக்கு தேவையான மின்சாரத்தை வைத்து நாம் பல்வேறு ஹ்யூஜ் இண்டஸ்ட்ரிகளை ஆரம்பித்து அவைகளை நடத்த முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. இரண்டாவது இறக்குமதி செய்கின்ற கற்களுடைய விலை இதைவிடக் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே இம் மாதிரியான தொழிலை ஏற்கனவே ஆரம்பித்திருப்பவர்களே நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, தொழிற்சாலை அமைப்பது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 150, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

150—

நிலக்கோட்டை தொகுதியில் தொழிற்பேட்டைக்கு நிலம் கையகப்படுத்தல்.

*17460—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—